5th September 1958]

SRI P. U. SHANMUGAM : சபைத் தலைவர் அவர்களே, மானேஜ்மென்டார்களும், சர்க்கார் மீது குறை சொல்லுகிறார்கள் ; தொழிலாளிகளும் சர்க்கார் மீது குறை சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம், இந்தச் சர்க்காரின் கொள்கை "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்று இருப்பது தானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் பாரபட்சமற்ற முறையிலே நடந்துகொள்ளுகிறார்கள் என்பதுதான் இதிலேயிருந்து விளங்குகிறது.

SRI M. KALYANASUNDARAM : ஹிந்து பத்திரிகை அதிபர் இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஹோம் மினிஸ்டருக்கு எதாவது புகார் செய்து, மத்திய சர்க்கார் ஹோம் மினிஸ்டர் இதிலே தலையிட்டிருப்பது உண்மையா ? அப்படியானால், விவரங்கள் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காருக்குப் புகார் செய்யவுமில்லை ; ஹோம் மினிஸ்டர் தலையிடவும் இல்லை.

### *Statues of National Leaders*

* 51 *Q*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த இடங்களில் தேசியத் தலைவர்களின் சிலைகளை வைக்க சர்க்கார் பண உதவி அளித்துள்ளது ?

(ஆ) எவ்வளவு அளித்துள்ளது ?

(இ) யாருடைய சிலைகள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government have sanctioned an expenditure of Rs. 50,000 for the purchase of the statue of Gandhi executed by Sri D. P. Roy Choudhury and installation of the same on the Beach at the junction of the Pycrofts Road, Triplicane, in the Marina.

I may also add that in connection with the 100th Anniversary of the Freedom Struggle in India in August 1957, the Government have sanctioned Rs. 6,100 for the construction of a Mantapam at Papanasam near the Kalyanathirtham Waterfalls in memory of late Sri V. V. S. Ayyar; Rs. 5,000 for the purchase of the House of V O. Chidambaram Pillai at Ottapidaram for constructing a memorial at the site; Rs. 9,040 for the erection of memorial for late Sri Tiruppur Kumaran at Tiruppur, near the railway station; and Rs. 5,000 for the installation of the bust of late Sri Tiru-vi-Ka with the pedastal at the Sembium Colony.

SRI K. VINAYAKAM : Sir, whereas the existence of statues of foreign rulers like the statue of King George V opposite to the Assembly Chamber, is nauseating to our national temperament, will the Government think about the feasibility of replacing it by either one of our State leaders like Sri Kamaraja Nadar and Sri Rajagopalachari, whoever it may be?

THE HON. SRI C. SUBRAMANIAM : Nowadays propaganda is being made for the retention of English, saying that its retention is not degrading. I do not see any reason why we should object to this.

[5th September 1958

Mr. SPEAKER : I would like to know when the hon. Member saw the statue opposite to the Fort St. George. He has not been looking at what has been existing in this hall (Laughter).

Sri A. GOVINDASAMY : திருப்பூரிலே குமரனுடைய சிலை வைக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது அவருக்கு ஒரு ஞாபகார்த்த ஸ்தூபி அமைக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : 'மெமோரியல் என்று நான் படித்தேன். அவருடைய சிலை வைக்கப்படவில்லை.

Sri V. K. KOTHANDARAMAN : வேறு எந்தெந்த தேசியத் தலைவர்களிடைய சிலைகளை வைக்கவேண்டுமென்று கோரியும், அதற்காக பணம் கொடுக்கவேண்டுமென்றும் அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்தனவா ? அப்படி வந்த மனுக்கள் எத்தனை மறுக்கப்பட்டன என்பதைச் சொல்ல முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

### *Ashe Memorial Hall*

* 52 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Ashe Memorial Hall in the Tuticorin Municipal limits was renamed as Vanchi Memorial Hall on the 15th August 1957;

(*b*) whether this decision was taken by the Municipal Council;

(*c*) whether this proposal was turned down by the Government; and

(*d*) if so, the reasons therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The Ashe Memorial Hall was not renamed as "Vanchi Memorial Hall" on the 15th August 1957, but the tablet containing the name "Ashe Memorial Hall" was removed under orders of Government on the 13th August 1957.

(*b*) The Tuticorin Municipal Council passed a resolution on 26th July 1957 for changing the name of "Ashe Memorial Hall" into "Vanchinathan Memorial Hall" and addressed the State Government for orders.

(*c*) & (*d*) Yes, Sir. The proposal, if given effect to, would constitute a breach of the terms of the Trust Deed under which the custody of the property is vested in the Treasurer for Charitable Endowments.

Sri M. KALYANASUNDARAM : யார் யார் அதனுடைய தர்மகர்த்தாக்கள் ? அவர்களுடைய அபிப்பிராயம் இதில் அறியப்பட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதில் தர்மகர்த்தர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து செய்வது இல்லை. முதலிலேயே இதற்காக சாசனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த சாசனத்தை அனுசரித்துத்தான் இது செய்யப்பட்டிருக்கிறது.